# வேலைக்குத் திரும்புதல் திட்டம்


## காயத்திற்குப் பிறகு நீங்கள் பணிக்குத் திரும்ப உதவுதல்



# பணிக்குத் திரும்புதல் (RTW) திட்டத்தில் நான் எவ்வாறு பலன் பெறுவேன்?

ஒரு பணிசார்ந்த காயம் ஏற்படும் போது அது உங்களுக்குத் துயரமானதாக இருக்கலாம் என்பதை நாங்கள் அறிவோம்

ஒரு RTW ஒருங்கிணைப்பாளர் மூலம் காயமடைந்த நபரான நீங்கள் குணமடையவும், தொடர்ந்து பணியில் இருக்கவும், மீண்டும் பணியில் சேரவும் உங்களுக்கு தனிப்பட்ட ஆலோசனை சேவையை RTW திட்டம் அளிக்கிறது.




RTW திட்டத்தின்கீழ், ஒரு RTW ஒருங்கிணைப்பாளர் பின்வருவனவற்றிற்காக உங்களுக்கு உதவுவார்:

1. உங்கள் மருத்துவ நிலைமையை புரிந்து கொள்ளவும் அதற்கு ஏற்ற என்ன சிறப்பான மருத்துவ ஆதரவு தேவை என்பதையும் தீர்மானிப்பதற்கு உங்கள் மருத்துவரை ஈடுபடுத்துவார்

2. உங்கள் வேலைக்கான கடமைகளைப் புரிந்துகொண்டு , நீங்கள் மீண்டும் வேலையில் சேர்வதற்கான தடைகள் மற்றும் வாய்ப்புகளை அடையாளம் காண உங்கள் முதலாளியை ஈடுபடுத்துவார்\

3. உங்கள் வேலைத்திறன் மற்றும் வேலைவாய்ப்புகளை மறுஆய்வு செய்து , மீண்டும் வேலைக்கு சேர்வதற்கான வழி திட்டத்தை அமைத்து அதன் முன்னேற்றத்தை கண்காணிக்க உங்களுக்கு உதவுவார்

நீங்கள் உங்கள் காயத்திற்கு முந்தைய வேலைக்கு திரும்ப முடியவில்லை என்றால், உங்களுக்கான வேறு வாய்ப்புகளைப் பற்றி உங்கள் RTW ஒருங்கிணைப்பாளர் உங்களுடனும் உங்கள் முதலாளியுடனும் கலந்து ஆலோசிப்பார். இதில் தற்போதைய முதலாளியின் கீழ் புதிய வேலைக்கான மறுப்பயிற்சி, அல்லது உங்கள் தற்போதைய செயல்த் திறனுக்கேற்ப புதிய வேலைக்கு அரசாங்க வேலை நிலையங்களிடமோ, சமூக சேவை நிலையங்களிடமோ பரிந்துரைத்தால் இடம்பெறும்

*சிங்கப்பூர் குடிமக்கள், நிரந்தரவாசிகள், மற்றும் வேலை அனுமதி சீட்டு வைத்திருப்போர் RTW திட்டத்தில் பங்கெடுக்கலாம்

## நான் RTW சேவைகளுக்கு கட்டணம் செலுத்த வேண்டுமா?

மறுவாழ்வு சிகிச்சை, RTW ஒருங்கிணைப்பு, செயல்பாட்டுத்திறன் மதிப்பீடு, மற்றும் பணியிட மதிப்பீடு ஆகியவற்றை RTW சேவைகளுக்கான செலவுகள் உள்ளடக்கும். அவைகளுக்கான நிதி பின்வரும் வகைகளில் அளிக்கப்படலாம்:

**பணிக்காய இழப்பீடு சட்டம் (WICA)**

நீங்கள் பணிக்காய இழப்பீடு சட்டத்தின் (WICA) கீழ் காப்பீடு பெறுபவராக இருந்தால், உங்கள் RTW செலவுகள் உங்கள் முதலாளி செலுத்தும் பணிக்காய காப்பீட்டு சந்தா மூலமாக நிதி அளிக்கப்படும்.

உங்களுக்குப் பின்வருவனவற்றை கோர உரிமை உண்டு:

- பணிக்காயம் காரணமாக உங்களுக்கு வழங்கப்பட்ட மருத்துவ விடுப்பு நாட்களுக்கான மருத்துவ விடுப்பு ஊதியங்கள், மற்றும்
- மருத்துவ ஆலோசனை கட்டணங்கள், மருத்துவமனைக் கட்டணங்கள் மற்றும் மருந்துகளுக்கான கட்டணங்கள் உள்ளிட்ட மருத்துவ செலவுகள்

**ஊழியர்களுக்கான சலுகைகள்**

நீங்கள் பணிக்காய இழப்பீடு சட்டத்தின் (WICA) கீழ் காப்பீடு பெறாதவராக இருந்தால், உங்கள் RTW செலவுகள் உங்களது ஊழியர்களுக்கான சலுகைகள் மூலமாக, மற்றும் குழு அல்லது தனியார் சுகாதார காப்பீடு மூலமாக நிதி அளிக்கப்படும்.

**RTW உதவித் தொகை**

நீங்கள் ஒரு சிறு/குறு நிறுவனத்தில் வேலை செய்பவராக இருந்தால், உங்கள் RTW செலவுகளுக்காக கூடுதல் RTW உதவித்தொகையை பெற உங்கள் முதலாளி www.wshc.sg/returntowork இணையத்தளம் மூலமாக விண்ணப்பிக்கலாம்

## நான் எவ்வாறு RTW பதிந்து கொள்ளலாம்?

- உங்கள் உடல் நலம் நிலையான பிறகு உங்கள் மருத்துவர் உங்களை RTW திட்டத்திற்கு பரிந்துரைப்பார்
- RTW திட்டம் பற்றிய மேல் விவரங்களை உங்கள் மருத்துவர் அல்லது சிகிச்சையாளரிடமிருந்து பெறலாம் .

காயமடைந்த ஊழியர் காயம் அடைந்ததற்குப் பிறகு மீண்டும் வேலைக்குத் திரும்ப சராசரியாக ஆறு (6)

## நான் RTW திட்டத்தில் எவ்வளவு காலம் இருக்க வேண்டும்?

மாதங்கள் வரை ஆகலாம்

# RTW வேலைக்குத் திரும்பும் பயணம்

## ஊழியர் காயமடைந்த உடன்

- உடனடியாக மருத்துவ உதவியைக் நாடவும்
- முடிந்தளவு முதலாளியிடம் தகவல் தெரிவிக்கவும்

## மருத்துவர் மருத்துவ உதவி மற்றும் மதிப்பீடு தருகிறார்

- ஊழியருக்கு சிகிச்சை அளித்தல், நோய் அறிதல், நோய் முன்னறிவிப்பு வழங்குதல்
- உடல் நலம் நிலையான பிறகு RTW திட்டத்திற்கு பரிந்துரைத்தல்.

## RTW ஒருங்கிணைப்பாளர் நிலைமையை ஆய்வு செய்கிறார்

- ஊழியரின் மருத்துவ நிலைமையை மருத்துவர் மூலம் புரிந்துகொள்ளுதல்
- ஊழியரின் வேலைக்கடமைகள் மற்றும் வேலைச்சூழல் பற்றி முதலாளி மூலம் புரிந்துகொள்ளுதல்

## RTW ஒருங்கிணைப்பாளர் மருத்துவர், ஊழியர் மற்றும் முதலாளி ஆகியோருடன் பணியாற்றுகிறார்

- தனிப்பட்ட திட்டத்தினை மேற்கொள்வதற்காக மருத்துவர் மற்றும் முதலாளியுடன் பணியாற்றுகிறார்
- வேலை மருவடிவமைப்பு செய்யவும் ஊழியர் மீண்டும் வேலைக்கு திரும்பவும் முதலாளியுடன் பணியாற்றுகிறார்
- மீட்டெழுதல்மற்றும்RTW திட்டங்கள்பற்றிவேலையளிப்பவருக்குதகவல்களைத்தெரிவிக்கிறார்.

## திட்டத்திலிருந்து வெளியேறுதல்

- ஊழியர் தற்போதய முதலாளி அல்லது புதிய முதலாளியின் கீழ் காயத்திற்கு முந்தைய வேலை அல்லது மாற்றம் பெற்ற முந்தைய வேலை அல்லது வேறு வேலைக்குத் திரும்புதல்
- ஊழியர் காயத்திற்கு முந்தைய வேலைக்குத் திரும்ப முடியாவிட்டால், அவர் தொழில்முறை பயிற்சிக்கு அல்லது வேலை வாய்ப்புக்கு அரசாங்க வேலை நிலையங்களிடமோ, சமூக சேவை நிலையங்களிடமோ பரிந்துரைக்கப்படுவார்

# பங்கேற்கும் மருத்துவமனைகள்

**Changi General Hospital**
Return-to-Work Clinic
Tel: 6788 8833
Email: Return_To_Work@cgh.com.sg

**Khoo Teck Puat Hospital**
Rehabilitation Services
Tel: 6555 8000
Email: ktph_returntowork@ktph.com.sg

**National University Hospital**
Rehabilitation Centre
Tel: 6772 2002
Email: nuhrtwc@nuhs.edu.sg

**Ng Teng Fong General Hospital**
Clinic A62 Rehabilitation
Tel: 6716 2000
Email: JHCampus_RTW@nuhs.edu.sg

**Singapore General Hospital**
Return-to-Work Clinic
Tel: 6326 6353 / 6321 4377
Email: occupational.health@sgh.com.sg

**Sengkang General Hospital**
Return-to-Work Clinic
Tel: 6930 6000
Email: rtw@skh.com.sg

**Tan Tock Seng Hospital**
Department of Occupational Therapy
Tel: 6357 8339
Email: occupational_therapy@ttsh.com.sg

ஆதரவாளர்

WSH COUNCIL — Tripartite Alliance for Workplace Safety and Health
MINISTRY OF MANPOWER
ntuc — National Trades Union Congress
SNEF

மேலும் தகவல் பெற www.wshc.sg/returntowork இணையப்பக்கத்தை நாடவும்